வருடத்திற்குள் இந்த வழக்குகளை முடிக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கடைசிப் பகுதிக்கு மட்டும் விடையளித்தால் போதும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : காலதாமதம் ஏற்படுவதை இந்த அமைச்சு உணர்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்குறிப்பு இருக்கிறது. காலதாமதம் ஆவதைத் தவிர்ப்பதற்கும், துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. போலீஸார் கொஞ்சம் பேர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் கூட்டுறவு துறைக்காக. அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருதி, அதை விரிவுபடுத்துவதற்கு செயற்குறிப்பு இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். கைது செய்யப்பட்ட குற்றவாளியோடு முதல் அமைச்சர் அவர்கள் அன்று சர்க்யூட் ஹவுஸில் விருந்துண்டார் என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்தான் அந்தப் பகுதியை அனுமதிக்கவில்லை என்று முதலிலேயே சொல்லிவிட்டேனே.

Dearness Allowance for Village Officers

* 166 *Q*.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Dearness Allowance of the Village Officers has been revised after 1964;

(*b*) if not, whether there is any proposal to revise the same; and

(c) if so, the details thereof ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN—

(a) No.

(*b*) and (*c*) The question of revision of the present structure of pay and dearness allowance of Village Officers has been referred to the Second Pay Commission. The Commission's report in this regard is awaited.

DR. H. V. HANDE : Will the Hon. Minister be able to tell us whether he has received any petitions from the Village Officers requesting the Government to accept whatever requests they have made to the previous Government and which had been passed on by the previous Government to this Government. This Government had said that they would implement all those requests. Is it not a fact that the present Government has given an assurance like that ? With regard to D.A., is it not a fact that this Government has assured at the Village Officers' meeting that since 1964, the whole thing will be reviewed. May I also know whether they have requested the Government that the new rules must be given effect to and not the old rules. May I also know whether this

1970 செப்டம்பர் 1]

Government has received any request that they should be made ex-officio members in the Panchayat Unions and also finally Sir, whether a request has been made to this Government ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவையும் அமைச்சர் நினைவில் வைத்துக் கொண்டு பதில் சொல்ல முடியுமா?

THE HON THIRU K. A. MATHIALAGAN : The hon. Member has raised a volume of supplementaries. I will try to answer as far as possible.

As for ts the first supplentary is concerned, that has been referred to the Pay Commission. Pending report of the Pay Commission, Government in G.O. No. 1097. Revenue, dated 10th April 1970, sanctioned payment of interim relief to Village Officers at the following rates—

Village Headman—Rs. 5 p.m.

Village Karnam—Rs. 5 p.m.

Trainee Officer—Rs. 5 p.m.

Vettiyan, Talayari and Neergandi—Rs. 3 p.m.

In G.O. No. 1226, Revenue, dated 21st April 1970, the Government directed the following rates of travelling allowance for Village Officers :—

Up to 5 miles—Rs. 20 per annum.

From 5 to 12 miles—Rs. 30 per annum.

From 12 to 20 miles—Rs. 40 per annum.

Over 20 miles—Rs. 50 per annum.

திரு. கே. விநயகம் : ஒரே பாட்டு, ஒரே தாளம் என்று தமிழிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள் அது போல எதற் கெடுத்தாலும்... ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் வேண்டாம். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கே. விநயகம் : எதைக் கேட்டாலும், யார் கேட்டாலும், பே கமிஷன் என்று சொல்லுகிறீர்களே. அந்த ஸெகன்ட் பே கமிஷன் டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸில் இந்த சப்ஜக்டுகளெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா ? அல்லது இதெல்லாம் விட்டு விடப் படுமா ? அந்த கமிஷனின் ரிப்போர்ட் எப்பொழுது வரும், சபைக்கு எப்பொழுது கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. எ. மதியழகன் : ஒரே பாட்டு, ஒரே தாளம் என்கிறீர்கள். இவர்களும் ஒரே கேள்வி, ஒரே மாதிரிக் கேட்டுக்கொண்டேதான் இருக்கிறீர்கள். (சிரிப்பு) முதல் பதிலி லேயே சொன்னேன், முதன் முறையாக கிராம அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறோம். பே கமிஷனுக்கும் இது போயிருக்கிறது: எவ்வளவோ பேர்கள் ஆண்டார்கள். உங்களைச் சேர்ந்தவர்கள் ஆண்டார்கள். (திரு. கே. விநயகம் : மாண்டார்

கள்) மாண்டார்கள் என்பானேன். எதற்காக மாளவேண்டும்? ஆளவேண்டும் என்பதுதான் விருப்பம். அதையெல்லாம் ஆராய்ந்து வருகிறார்கள். அதோடு இடைக்கால நிவாரணமும் ட்ராவலிங் அலவன்சும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கே பல லட்சம் ரூபாய் ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். பே கமிஷன் ரிபோர்ட் வருவதற்கும் ரொம்ப காலம் ஆகாது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் ரிபோர்ட்டை அனுப்புவார்கள்.

Service conditions of Village Officers

*167 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to revise the Rules and Regulations governing the service conditions and appointments of the Village Officers; and

(b) if so, when they could be expected to be published ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) அவை விரைவில் பிரசுரிக்கப்படும்.

Dr. H. V. HANDE : Sir, is it not a fact that 342 employees from the South Arcot district and 28 employees from Uthamapalayam in the Madurai district were retrenched from the Village Officers' posts vide G.O. Ms. No. 2034, Revenue, dated 23rd October 1963? Also, even the stay order issued by the Government has not been implemented by the Collectors of South Arcot and Madurai districts and what is the follow-up action taken by the Government ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir. I want notice.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் இவர்களே, இவர்களை முழு நேர ஊழியர்களாக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ? அதற்கான விதிகள் பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியகழன் : அதைத் தான் மூலக் கேள்வியிலேயே சொன்னேன். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜுமெண்டுப் படி, வம்சாவளி நியமனம் செல்லாது என்று ஆகிவிட்டது. புது சட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில்,

Tamil Nadu Village Officers Rules :

Tamil Nadu Village Officers, Conduct Rules; and

Tamil Nadu Village Officers, Classification, Control and Appeal Rules.

என்று விதிமுறைகளைத் தயாரித்து வருகிறார்கள். விரைவிலேயே அது பற்றி அறிவிக்கப்படும். முழு நேர ஊழியர்களாக்கும் நிலை பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுத்தவுடன், அவைக்கு அறிவிக்கப்படும்.